**O.S.No. 232/2013**

**DW3 :** **சவின்குமார்** தேதி 04.11.2025

**பிவாசா 3 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய பிறந்த தேதி 11.12.1994 ஆகும். நான் BCom (CA) முடித்திருக்கிறேன். நான் மினிஸ்ட்டர் ஒயிட் கார்ப்பரேட் கம்பெனியில் மார்க்கெட்டிங் ஸ்டாபாக பணியாற்றி வருகிறேன். 2014 ல் இருந்து நான் வேலைக்கு செல்கிறேன். 2014 ல் டையின் கம்பெனியில் 1 வருடம் பணிபுரிந்தேன். பின்னிட்டு 5 வருடம் ராம்ராஜ் கம்பெனியில் பணிபுரிந்தேன். தற்போது மினிஸ்ட்டர் ஒயிட் கார்ப்பரேட் கம்பெனியில் பணிபுரிகிறேன். என் அப்பா பிவாசாஆ 1 சுவாதீனம் எடுக்கப்பட்ட சொத்துகள் அனைத்தையும் விற்று விற்றார் என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா என்னுடன் தான் இருக்கிறார். என் அப்பா இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக வழக்கில் எதிர்வாதம் செய்யாமல் இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தாத்தா சீரங்ககவுண்டர் வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 1973 ல் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வாசாஆ 3 பத்திரத்தில் என் அப்பா வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 பத்திரத்தை தெரிந்து அதில் சாட்சி கையெழுத்திட்ட விவரம் தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தாவின் சொந்த ஊர் பெருந்துறையில் உள்ள கைக்கோலன்பாளையம் என்றால் சரிதான். அந்த ஊரில் என் தாத்தாவிற்கு பூர்வீக சொத்துகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல உள்ளது. அதன் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் விஸ்தீரணம் தெரியும் சர்வே எண் தெரியாது. வீரசங்கிலிபாளையத்தில் உள்ளது. அதற்கான பத்திரங்களை பார்த்திருக்கிறேனா என்றால் ஒரு முறை பார்த்தேன் ஆனால் ஞாபகத்தில் இல்லை. என் தாத்தா சீரங்ககவுண்டர் சிறு

வயதிலேயே ஊட்டிக்கு சென்று டீ எஸ்டேட்டில் வேலை செய்து வருமானம் ஈட்டினார் என்றால் சரிதான். அவர் டீ தூள் வியாபாரம் செய்தார். பின்னிட்டு சொந்த ஊருக்கு திரும்பி வந்து முட்டை வியாபாரம் செய்தார் என்றால் சரிதான் முட்டை வியாபாரம் மற்றும் டீ தூள் வியாபாரம் செய்தார். பிவாசாஆ 1 ல் கண்டுள்ள சொத்துகளை என் தாத்தா சீரங்ககவுண்டர் வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ன் படி 1973 ல் கிரையம் பெற்றதை ஒப்பு கொண்டுள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. ஒரு பழனிசாமி என்பவர் என் தாத்தா மீது அ வ எண் 11/1980 வழக்கை புரோ நோட் பெயரில் வழக்கு தொடர்ந்ததில் அவ்வழக்கு 4.8.81 ல் பழனிசாமி தீர்ப்பு பெற்றார் என்றால்  அது எனக்கு தெரியாது. என் தாத்தா வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ன் சொத்தை காப்பாற்றும் எண்ணத்தில் என் அப்பாவும் என் தாத்தாவும் வஞ்ச கூட்டாக சேர்ந்து அ வ எண்.382/83 என்ற வழக்கை என் அப்பா பாகபிரிவினை கோரி ஈரோடு DMC நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் ஒரு வழக்கு நடந்தது ஆனால் மேற்படி அ வ எண்ணா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என் அப்பா என் தாத்தா மீது தாக்கல் செய்த வழக்கின் பிராது நகல் என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை படித்து பார்த்து விட்டு ஆங்கிலம் புரியவில்லை என்று கூறிவிட்டார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அ. வ.எண்.382/83 என்ற வழக்கை குறித்து சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தின் பிராது நகல் அது தான் என்றால் சரிதான். அது **வாசாஆ 25**. மேற்படி வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது **வாசாஆ 26** மற்றும் **வாசாஆ 27**. 2005  ம் ஆண்டில் என் தாத்தா என் அப்பா என் அத்தை ஆகியோர் சேர்ந்து என் தாத்தாவின் நண்பர் சண்முகபிரபு என்பவர் மீது பெருந்துறை DMC நீதிமன்றத்தில் அ வ எண். 168/2005 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்திருந்தார்கள் என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா அவருடைய சகோதரிகள் மீது பாகப்பிரிவினை கோரி 621/91 சப் கோர்ட் ஈரோட்டில் வழக்கு தொடர்ந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்( வாசாஆ 10). மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதிகள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு என் அப்பாவிற்கு சாதகமாக தீர்ப்பானது. மேற்படி வழக்கில் என் தாத்தாவும் என் அத்தைகளும் ஆஜராகவிலலை என்பதால் ஒருதலைபட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பாணையின் பேரில் EP (A20) தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி நிறைவேற்று மனுவில் சர்வே எண்கள். 189/1 ,189/2 என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் கிராமம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி EP மனுவில் சர்வே எண்கள். 189/1 ,189/2 பிவாசாஆ 1 ன் படி என் அப்பா சுவாதீனம் எடுத்தார் என்றால் சரிதான். பிவாசாஆ 1 ல் பெரியவீரசங்கிலி கிராமம் என்று கிராமம் குறிப்பிடப்பட்டு அதில் சர்வே எண்கள். 189/1 , 189/2 விவரங்கள் மற்றும் அதன் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்துக்கள் எவ்வாறு வந்தது என்பதை காண்பிக்க என் தாத்தா சீரங்ககவுண்டரோ என் அப்பாவோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என் அத்தை 4 ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு 1989 ல் திருமணம் ஆனது என்றால் ஆமாம் கேள்விபட்டிருக்கிறேன். வாசாஆ 10 ன் படி தாவா சொத்துகள் வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ன் படி கிரையம் பெற்ற சொத்துகள் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அ.வ.எண்.621/91 என்ற வழக்கில் என் அத்தை சரஸ்வதிக்கு சம்மன் சார்வாகாமல் ஒருதலைபட்ட தீர்ப்பானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண் 621/91 சொத்துகளில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

அ.வ.எண்.382/83 வழக்கு வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்பட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அ வ எண்.621/91 ல் இந்த வழக்கின் வாதிகளுக்கு 25.2.2013 ல் தான் சம்மன் சார்வு செய்யப்பட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அதனுடைய ஆவணங்கள் கேட்டு நகல் மனு தாக்கல் செய்த போது அந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டதாக மேற்குறிப்பு செய்யப்பட்டு CA திருப்பப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பா என் அம்மாவிற்கு 2 தானசெட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளதில் என்னை இளவராக காட்டி எழுதி வைக்கப்பட்டது என்றால் அது அப்போது எனக்கு தெரியாது பின்னிட்டு தெரிந்து கொண்டேன். மேற்படி விவரம் எப்போது தெரிய வந்தது என்றால் என்னுடைய 27 வயதில் எனக்கு தெரிய வந்தது. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி எங்கள் குடும்பத்திற்கு சொத்து இல்லை என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அந்த பத்திரங்களை நகல் எடுத்து பார்க்கலாம் என்ற விவரம் தெரியுமா என்றால் விவரம் தெரியும் ஆனால் நகல் எடுத்து பார்க்கவில்லை. நான் மேஜராக பிறகு என் அப்பா என் அம்மாவிற்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்று நான் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான் கடந்த 3 வருடமாக தான் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறேன். தாவா சொத்துகளை பொறுத்து என்னுடைய அப்பா அம்மா பெயரிலோ என்னுடைய பெயரிலோ இருப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களிடம் இருப்பது அ வ எண்.621/91 ன் தீர்ப்பாணை மட்டும் தான். வேறு ஆவணங்கள் இல்லை. என் தாத்தா

வாங்கிய வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 பத்திரங்கள் தான் தாவா சொத்திற்குரியது என்று சொல்கிறேன். வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 குறித்து அ வ எண்.621/91 ல் சொல்லப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. பூர்வீக சொத்து தனிப்பட்ட சொத்து கூட்டு குடும்ப சொத்து ஆகியவற்றிக்கு வித்யாசம் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். அ வ எண். 621/91 ல் கண்டுள்ள சொத்துகள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுவிட்டது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்துகள் சம்மந்தமான விவரங்கள் நேரடியாக தெரியாத நிலையில் எதற்காக எதிர்வாதம் செய்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அ வ எண்.621/91 வழக்கு தீர்ப்பாணை படி எந்த ஒரு பலனும் எனக்கு ஏற்படவில்லை என்பதால் நான் இவ்வழக்கில் எதிர்வாதம் செய்கிறேன். சொத்துகளில் என் அப்பாவுடன் பிறந்த சகோதரிகளுக்கு வாரிசு உரிமை சட்டத்தின் படி பங்குரிமை உள்ளதா இல்லையா என்றால் உரிமை உள்ளது ஆனால் மொத்தம் 10 ஏக்கரில் 5 ஏக்கர் என் அப்பாவிற்கும் 5 ஏக்கர் என் அத்தைகளுக்கும் என் தாத்தா கொடுத்துவிட்டார் என்று சொல்கிறேன். அவ்வாறு எழுதி வைத்த பிறகு தான் பெண்கள் வாரிசு உரிமை சட்டம் வந்தது தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் 1/3 பங்கு எனக்கு வேண்டும் என்று கேட்கிறேன். காரணம் பூர்வீக சொத்தில் என் அப்பாவிற்கு உள்ள பங்கில் எனக்கும் பங்கு உள்ளது என்று சொல்கிறேன். நான் பூர்வீக சொத்து என்று சொல்வது வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 படி என் தாத்தா வாங்கிய கிரைய சொத்து கைகோலபாளையத்தில் உள்ள சொத்து என்று சொல்கிறேன். என் அப்பா ஏன் எதிர்வாதம் செய்ய முன்வரவில்லை என்றால் அவருக்கு சொரியாசிஸ் என்ற தோல் நோய் உள்ளதால் அதற்கான சிகிச்சையில் உள்ளார். என் அப்பாவை நீதிமன்ற ஆணையர் மூலம் விசாரிப்பதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை இல்லை. என் அப்பாவிற்கு தாவா சொத்தில் பங்குரிமை

இல்லை என்றும் 1 ,2 ,3, 10, 12 பிரதிவாதிகளிடம் இருந்து தகுந்த பிரதிபலன்களை பெற்று கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.